‘முரசு’ புயலில் சிக்கி, உயிரிழந்த மற்றும் மாயமான

மீனவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்! நிதியுதவி!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

















சென்னை, நவ. 10 –

`முரசு’ புயலில் சிக்கி, உயிரிழந்த மற்றும் மாயமான சென்னை காசிமேடு, எண்ணூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களின் இல்லங்களுக்குச் சென்று, அவர்களது குடும்பத்தினரைச் சந்தித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஆர்.கே.நகர் தொகுதி, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த குப்புசாமி, ஒத்தவாடை தெருவைச் சேர்ந்த முருகன், பல்லவன் நகர் பகுதியைச் சேர்ந்த குப்பன், காசிமேடு காசிபுரம் பகுதியைச் சேர்ந்த சூர்யா, காசிமேடு N-4 அண்ணா நகர் பகுதியைச் சேர்ந்த அரவிந்தன், இராயபுரம் தொகுதி காசிமேடு இந்திரா நகர் பகுதியைச் சேர்ந்த மோகன், திருவொற்றியூர் தொகுதி திருச்சினாங்குப்பம் மீனவக் குடியிருப்பைச் சேர்ந்த மாயமான ராஜேஷ் மற்றும் எண்ணூர் சுனாமி குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த விஜயகாந்த் ஆகிய எட்டு மீனவர்களின் குடும்பத்தினரையும் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

உயிரிழந்த மீனவர்களின் திருவுருவப்படங்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தியதுடன், அவர்களின் குடும்பத்தினருக்குக் கழகத்தின் சார்பில் நிதியுதவியும் வழங்கினார். மேலும், இத்துயரமான நேரத்தில் கழகம் அவர்களுக்குத் துணை நிற்கும் என்றும் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையிலும் மீனவர்கள் கடலுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டதோடு, மீனவர்கள் மாயமானது தொடர்பாக அளிக்கப்பட்ட புகார்களையும் அரசு உரிய முறையில் கவனத்தில் கொள்ளவில்லை என்றும், அரசின் அலட்சியப் போக்கே இந்த உயிரிழப்புகளுக்குக் காரணம் என்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கண்ணீருடன் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடும்பத்தினரின் கோரிக்கைகள் குறித்து, செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அரசுத் தரப்பில் வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும், மீனவர்களுக்குப் போதிய காப்பீட்டு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும், `மீனவர்களின் உயிரைப் பாதுகாக்க வேண்டிய அரசு, தனது பொறுப்பை உணர்ந்து புயல் மற்றும் பேரிடர் காலங்களில் உரிய முன்னெச்சரிக்கை, கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அரசின் அலட்சியத்தால், இனி ஒரு மீனவரின் உயிரும் பறிபோகக் கூடாது’ என்றும் தெரிவித்தார்.

`பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் நியாயமான கோரிக்கைகளை, அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்’ என வலியுறுத்திய அவர், இத்துயரமான சூழலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கழகம் என்றும் உறுதுணையாக நிற்கும் என்றும் உறுதியளித்தார்.

கோவை பெரியார் அறிவுலகத்தில்

புத்தகக் கொள்முதல் ஊழல் குறித்து விசாரிக்க வேண்டும்!

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநருக்கு தி.மு.க. சார்பில் சட்டத்துறை இணைச் செயலாளர் ஐ.பரந்தாமன் வலியுறுத்தல்!

சென்னை, நவ.10 –

கோவை ‘பெரியார் அறிவுலகத்தில்’ புத்தக கொள்முதல் நடைபெற்றதில் ஊழல் குறித்து விசாரிக்க தி.மு.க. சார்பில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் ஐ.பரந்தாமன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநருக்கு புகார் அனுப்பியுள்ளார்.

அதன் விபரம் வருமாறு:-

கோவை பெரியார் அறிவுலகத்தில் புத்தக கொள்முதல் நடைபெற்றதில் ஊழல் குறித்து விசாரிக்க தி.மு.க. சார்பில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரிடம் நேற்று புகார் அளிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் கேள்விகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

1. புத்தகங்களுக்கான கொள்முதல் /வாங்குதல் ஆர்டர்களை (procurement / purchase orders) வழங்கிய அதிகாரிகள் யார்?

2. புத்தகங்கள் ஒவ்வொன்றாக மதிப்பீடு செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு வாங்கப்பட்டதா அல்லது மொத்தமாக (in bulk batches) வாங்கப்பட்டதா?

3. பதிப்பகங்களுக்கு கொள்முதல் ஆர்டர்கள் எந்த தேதிகளில் வழங்கப்பட்டன?

4. கொள்முதலுக்கான குறிப்பு கோப்பை (note file) தொடங்கிய, கையெழுத்திட்ட மற்றும் ஒப்புதல் அளித்த அதிகாரிகள் யார்?

5. கொள்முதலுக்கு தகுதிவாய்ந்த புத்தகத் தேர்வு / கொள்முதல் குழு (Book Selection / Purchase Committee) ஒப்புதல் அளித்ததா, மேலும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்பட்டதா?

6. த்ரிஷா விஜய், சங்கீதா விஜய், தாமரை பன்னீர், தாமரை முரளி, மோனிகா ரவி ஆர். மற்றும் பிற பெயர்களைக் கொண்ட எழுத்தாளர்கள் உண்மையில் இருக்கிறார்களா?

7. புத்தகங்கள் எந்த தேதிகளில் விநியோகிக்கப்பட்டன, அவை பெறப்பட்டவுடன் அவற்றின் தரம் மற்றும் அளவு சரிபார்க்கப்பட்டதா?

8. ஒவ்வொரு பதிப்பகத்திற்கும் எந்த தேதிகளில், எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

இவ்வாறு அந்த புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் தொகுதி தேர்தல் விவகாரம்:

பெரிய கருப்பன் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு ஏற்பு!

தேர்தல் ஆணையம் பதிலளிக்க உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்!

புதுடெல்லி, நவ.10-

தமிழ்நாடு சட்டப் பேரவை தேர்தலில், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் த.வெ.க. சார்பில் போட்டியிட்ட சீனிவாச சேதுபதி, ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அவர் 83,375 வாக்குகள் பெற்ற நிலையில், அவரை எதிர்த்து போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் முன்னாள் அமைச்சர் பெரிய கருப்பன், 83,374 வாக்குகளை பெற்றிருந்தார்.

இதனையடுத்து சீனிவாச சேதுபதியின் வெற்றியை எதிர்த்து முன்னாள் அமைச்சர் பெரிய கருப்பன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்கு பதிவான தபால் வாக்குகள், திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்கு அனுப்பப்பட்டதால் தான் தோல்வியடைந்து விட்டதாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் பெரிய கருப்பனின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து பெரிய கருப்பன் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், அபரேஷ் குமார் சிங் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுவை பரிசீலித்த நீதிபதிகள் பெரிய கருப்பனின் மனுவை விசாரணைக்கு ஏற்பதாக தெரிவித்து, இந்த மனு தொடர்பாக த.வெ.க. எம்.எல்.ஏ. சீனிவாச சேதுபதி, இந்திய தேர்தல் ஆணையம் உள்ளிட்டோர் பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டனர்.